விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- எட்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 03 | வெள்ளிக்கிழமை (18.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 334

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமெந்து



பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவும்; ரணில் விக்கிரமசிங்கவும் தமது வாக்கை அளிப் பதைப் படங்களில் காணலாம்.

## வாக்களிப்பு நிலையம் மீது அம்பாறையில் தாக்குதல்

### வயோதிபப் பெண் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு விவேகானந்தா வித்தியாலயம் வாக்குச்சாவடியில் பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸார் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தச் சம்பவத்தின்போது வாக்களிக்கச்சென்ற 56 வயது பெண்மணி படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடியிலுள்ள கொத்தணி வாக்குச்சாவடிகளுக்கு அருகாமையில் நடந்த மற்றுமொரு கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் 9 பொதுமக்களும் பொலிஸ் இளநிலை அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவங்களினை அடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பில் பல பகுதிகளிலும் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதல்கள் இராணுவத்தினரை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ச)

# ஜனாதிபதித் தேர்தலினை யாழ். மக்கள் புறக்கணித்தனர்

## சிங்கள வர்த்தகர் சுட்டுக்கொலை

திருகோணமலை மாவட்டம் புறநகர் பகுதியான செல்வநாயகபுரம் வைத்தியசாலையினை அண்மித்த பகுதியில் வைத்து நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளின் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். வர்த்தகரான ஜனசகி ஹேம குமார (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை இவரது (08 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாறு காணாத வாக்களிப்பென விபரிப்பு

(நமது நிருபர்கள்)

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை தமிழர் தாயகப் பிரதேச மக்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தனர். இதன்மூலம் தமிழ்மக்களுக்கிடையேயான ஒற்றுமையை சிங்களத் தலைமைகளுக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வரலாறு காணாத வகையில் இம்முறை குறைந்த வீதமானோரே வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். அதாவது வாக்களிக்க தகுதிபெற்றுள்ள 7 01 938 பேரில் 2317 வாக்காளர்களே வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிக்காது மூதூரில் ஆர்ப்பாட்டம்

இராணுவம் பொருளாதாரத் தடைவிதித்திருப்பதைக் கண்டித்து நேற்றுத் திருமலை மூதூரில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

கட்டைப்பறிச்சான், ஈச்சிலம்பற்று சோதனைச் சாவடிகள் முன்பாக மூதூர் கிழக்குப் பிரதேச மக்கள் இந்த மறியல் போராட்டத்தை நடத்தினர்.

எம்மிடம் வாக்குகளை எதிர்பார்கின்ற சிங்கள அரசு,எமது வாழ்வாதாரப் பொருட்களைக்கூட எடுத்துச் செல்ல (08 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று வெறிச்சோடிய யாழ்ப்பாணம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்து நேற்று யாழ். குடாநாட்டில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதால் சகல பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

வர்த்தக நிலையங்கள், சந்தைகள் என்பன இயங்கவில்லை. வீதிகள் மக்கள் நடமாட்டமின்றிக் காணப்பட்டது. நகரின் முக்கிய பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

போக்குவரத்துக்கள் எவையும் இடம்பெறவில்லை. மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை இடை நிறுத்தி துக்கதினம் அனுஷ்டித்தனர். இதேவேளை வாக்களிப்பைத் தடுக்கும் வகை யில் யாழ். குடாநாட் (08 ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணப்பட்ட வாக்குகளின்படி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில்!



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் உள்ளார்.

எண்ணப்பட்ட தபால்மூல வாக்குகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ அதிக வாக்கு வித்தியாசத்தில் முன்னணியில் உள்ளார்.

இரத்தினபுரி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, வன்னி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் தபால்மூலப் பெறுபேறுகளின் அடிப்படையில் மகிந்த முன்னிலையில் உள்ளார்.

அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியின் வேட்பாளர் விக்டர் ஹெட்டிக்கொட மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (ச)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# உடல் நலனுக்குக் கேடு தரும் புகைப் பழக்கம்!

புகைபிடிக்கும் பழக்கம் எமது சமூகத்தில் மேலைத்தேய ஆட்சியின் தாக்கத்தாலேயே ஏற்பட்டது. இதனால் இத்தீய பழக்கத்தைத் தவிர்ப்பதற்கான அறவழிகள் எமது பழைய இலக்கியத்தில் இல்லை. புகைத்தலை விலக்குவதால் துன்பமில்லாத வாழக்கை அமையும் என்ற விழிப புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். "பகை புகை மிகை நகை" என்பது இதனை எளிதில் மனதில் பதிக்க உதவும்.

## புகைப்பதால் ஏற்படும் தீமை

புகைப்பிடிப்பவரின் வாய் வெப்பத்தினால் கருகி செவ்விதழ் கருமையாகி காணப்படும். அவர்களது செயல்களும் கருமையாகி இருக்கும். நடத்தை மாற்றங்கள் காணப்படும். இது ஒரு ஆபத்தான சக்கரமாக புகைப்பிடித்தலுடன் மதுபானம் பாவித்தல், சமூக விரோதச் செயல்கள், போதைப் பொருள் பாவனை என்பன இணைந்து காணப்படும். அல்லது அவற்றிற்கு ஆளாகும சூழ்நிலை காணப்படும். சிறைக் கைதிகளிலும், சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரிலும் புகைபிடிக்கும் பழக்கம் காணப்படும். சமூகத்தில் வன்முறை அதிகரிப்பதற்கு புகைத்தல் பாவனையும் மறைமுகமான காரணமாக உள்ளது. அதாவது போதைப் பொருள் பாவனைக்கு அடிப்படையாக புகைத்தல் பழக்கம் உள்ளது. "தீயிலும் தீயவர் தீயினை வாய்தனில் நயப்பவர்" என்பது இதனை விளக்கும்.

எம்து சுவாசச் சிற்றறைகள் எண்பது சதுர மீற்றர் பரப்பளவு கொண்டது. இது உடலுக்கு உயிர்வாழ அத்தியாவசியமான ஒட்சிசனை குருதிக்கலன்களுக்கு கொடுத்து காபனீரொட்சைட்டை அகற்றுகின்றது. இதனை நெருப்பினால் சிதைக்கும் நபர்கள் தம் சிதைகளைத் தாமே கொள்ளி வைக்கும் நிலையில் உள்ளவர்களே. இதனைப் பலர் விரும்பிச் செய்கின்றனர். மேலும் விலை கொடுத்துச் செய்கின்றனர். இதனால் ஏற்படும் பொருளாதார நட்டத்திற்கு மேலாக நோய்வாய்ப் படலும் ஏற்படுகின்றது.

புகைப் பிடிப்பவர்களில் அரைவாசிப்பேர் அதனாலேயே இறக்கின்றனர். சுவாசப்புற்று நோய், சுவாசப்பாதைப்புற்று நோய், சுவாசப்பை அழற்சி, இதய பலவீனம், மாரடைப்பு, பாரிசவாதம், கால்களுக்கு செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படல், வாய்புற்று நோய், களப்புற்றுநோய், இரைப்பைப்புண், சிறுநீர்ப்பை புற்று நோய், எனப் பல நோய் நிலைகள் புகைப்பிடிப்பவர்களுக்கும், புகைப்பிடிப்பவர்களுக்கு அருகில் நின்று சுவாசிப்பவர்களுக்கும் ஏற்படுகின்றது. மேலும் வயது வந்தவர்களில் என்பு முறிவு ஏற்படும் சந்தர்ப்பம் புகைப்பிடிப்பதால் அதிகம் ஆகும். கசநோய் ஏற்படும் சந்தர்ப்பமும் கூடுதலாகும. புகையில் காணப்படும் 4000 வகையான இரசாயனப் பதார்த்தங்களில் 60 வகையானவை புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை உடையன.

## விடுபடுவது எவ்வாறு?

புகைப்பிடிக்கும் பிறழ்வு நடத்தையில் இருந்து விடுபட அதற்கு ஆளானதற்கான உளசமூகக் காரணிகளை ஆராயவேண்டும். சில குடும்பங்களில் பெற்றோர், சகோதரர்கள் புகைபிடிக்கும் பழககம் உடையவர்களாகக் காணபபடின் பிள்ளைகளும் புகைப் பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகின்றனர். புகைபிடித்தால் எவ்வாறு இருக்கும் என்ற ஆவல் சிறுவர்களை புகைப்பிடிக்கத் தூண்டுகின்றது.

இதற்கு புகைப் படங்களில் வரும் காட்சிகளும், விளம்பரங்களில வரும காட்சிகளும் காரணமாக இருக்கின்றது.

சக பாடிகளின சேர்க்கை பலரில் புகைப்பிடிக்கும் தன்மையை ஏற்படுத்தும். இது பொதுவாக பல்கலைக்கழக மாணவர்களிலும், ஒன்றாகத் தொழில் பார்ப்பவர்களிலும், ஒன்றாக வாழ்பவர்களிலும் காணப்படுகின்றது. மரண வீடு, திருமண வீடு மற்றும் களியாட்டங்களின் போது இலவசமாகக் கிடைக்கும் சூழலே சிறுவர், இளைஞர்களில் புகைப் பிடிததல் ஆரம்பிப்பதற்கு காரணமாக அமைகின்றது.

புகைப்பிடித்தல் தங்களுக்கு ஒரு வேறுபட்ட இடத்தைத்தரும் எனும் முரண் நோக்கில் சிலர் புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஆரம்பிக்கின்றனர். வேறும் சிலா தமது சுதந்திரத்தின் எல்லையை தாம் புகைக்கும் புகையினால் வரையறுக்க முனைவர்.

சிறுவயதில தாய்ப்பால் குடித்தலில உள்ள இடையூறுகள் உளவியல் ரீதியில் பிற்காலத்தில் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாக ஏதுவாக அமைகின்றது. இத்தகையவர்கள் விசேட கவனம் எடுப்பதால் இதனைத் தவிர்க்கலாம்.

மேலும் சிலர் சுவைப்புலன், தொடுகைப்புலன் என்பவற்றில் ஏற்படும் குறையை நிவிர்த்தி செய்யும் முகமாக புகைப்பிடித்தலில் ஈடுபடுகின்றனர்.

புகைத்தலை விலத்தும் செயற்பாட்டில் ஆலோசனை வழங்கலும் பின்னூட்டலும் முதலாம் மாதம், மூன்றாம் மாதம், ஆறாம் மாதம், ஒருவருடத்திலும் மேற்கொள்ளப்படும் அவர்களின் முறைப்பாட்டை மதிப்பளித்துக் கேட்கவேண்டும். அவர்களிடம் நெருக்குவாரம், நோ, விரக்தி, மனத்திடமின்மை காணபபடும். காலம் கடந்தாலும் காரியமில்லை. நிறுத்தினால் நல்லது என்பதை இலகுவாகவும் விளங்கக்கூடிய முறையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தனமையிலும் அவர்களின் நிலைமைகளைப புரிந்து உணர்த்தல் வேணடும். அவர்களைத் திட சஙகற்பம் கொள்ள வைக்கவேணடும்.

## விலத்தல் அறிகுறிகள்

புகைத்தலை விலக்கினால் 48 மணித்தியாலயத்தில் குருதியில் பெரும்பாலான காபன்மொனோட்சைட்டும் நிக்கொட்டினும் இல்லாது போகும். விலத்தலை மேற்கொள்ளும் போது திடசங்கற்பம், திட்டமிடல், ஆதரவு என்பன தேவை. இதனை உடனடியாகவோ ப்டிப்படியாகவோ மேற்கொள்ளலாம். விலத்தல் அறிகுறிகள் முதல் கிழமையில் அதிகமாக இருக்கும் 3-4 கிழமைகளில் முற்றாக நின்றுவிடும். எனவே இக்காலப்பகுதியில் திடசங்கற்பத்துடன் இருப்பதால புகைத்தலில் இருந்து முற்றாக விடுபடலாம். புகைத்தலை விலத்தும் போது மீளப் புகைத்தலுக்கு ஆளாகும் நிலை மன அவா ஏற்படும் போதும் விலத்தல் அறிகுறிகள் ஏற்படும் போதும் முன்னர் புகைததல் சந்தர்ப்பங்கள மீளவரும் போதும் ஏற்படும். இது ஆறு நிமிடங்களுக்கு நீடிக்கும். இதில் 2-3 நிமிடம்வரை கடினமாக இருககும். ஆனால் அந்நேரம் கடந்தால் அவ் அவா நீங்கிவிடும். சிலருக்கு புகைப்பெட்டி அருகில் இருக்க வேண்டும். அன்றேல் பதகளிப்பு ஏற்படும். இவாகளுக்கு விலத்தலை மேற்கொள்ளும் போது புகைப்பெட்டியை வலிமையாக கடடிவைப்பதால் அவா கழியும் வரை பெட்டியைத்திறக்காது நேரத்தைக்கடத்தலாம்.

புகைபபிடிப்பவர்களில விலத்தல் அறிகுறிகளாக தலைச்சுற்று 1-2 நாட்களுக்கு இருக்கும். களைபபுக் காணப்படும். இருமல், நெஞ்சு இறுக்கம், நித்திரைக்குழப்பம் என்பன முதல் ஒரு கிழமைக்குக் காணப்படும் மலச்சிக்கல் 3-4கிழமைகளுக்கு காணபபடலாம். பழவகைகளை உட்கொள்வதால் இதனைத்தவிர்க்கலாம். மேலும் பசி, சினத்தல், கிரகிக்கும் தன்மை குறைதல் என்பன ஏற்படலாம். இதனால் மீளவும் புகைப்பிடிக்க அவாவுறுவர். இந்த நிலையில் எதிர்ப்புப் பொறி முறையால் மீண்டும் புகைப்பிடித்தலைத் தவிர்க்கலாம். அத்தகைய சந்தர்பத்தில் பாராட்டி வெகுமதியும் அளிக்கலாம்.

இரண்டு கண்ணாடிப் பாத்திரங்களை வைத்து ஒன்றினுள் பழைய எரிந்த புகைத்த அடிக்கட்டைகள் மற்றையதை வெறுமையாகவும் வைக்க வேண்டும. புகைக்கும் எண்ணம் வரும் போது பழைய அடிக்கட்டைகளைப் பார்த்தால வெறுப்பு ஏற்படும். ஒவ் வொரு முறையும் புகைக்கும் எண்ணம் வரும்போது பழைய அடிக்கட்டைகளைப் பார்த்தபின் ஒவ்வொரு தடவையும், புகைக்கும்போது செலவாகும் பணத்தை முதலில் ஒவ்வொரு நாளும், பின் கிழமைகளிலும் பின் மாதங்களிலும் கணக்கிட வேண்டும். இது புகைததலை விலத்தலைத் தூணடும்.

## மீள புகைத்தலுக்கு ஆளாவதைத் தவிர்த்தல்

புகைத்தலை துறந்த பின் குறிப்பேடு எழுதுவதால் மீள புகைப் பிடித்தலுக்கு ஆளாதலைத் தவிர்கலாம். இதன்போது புகைத்தலை விட்ட நான், புகைத்தலைத் தூணடும் நினைவுகள் சேமித்த பணம் என்பன மீட்கப்படல் வேண்டும். உண்மையில் ஒரு நண்பனின் இழவு போல் இது அமையும். இதன் போது உடல்நலத்திற்கும், ,, பிருக்கும், வாழ்க்கைத்தரத்திற்கும் முதல் எதிரி என்பதனை விளங்கப்படுத்தி புகைப்பிடித்தற்கான உளவியல் பற்றைக்கூறல் வேண்டும்.

சிலா புகைப்பிடிப்பதால் பதகளிப்பு குறையும் என்பர். இது தவறானதும் எதிர் மறையானது மாகும். புகைப்பிடிப்பதால் பதகளிப்பு அதிகரித்து மேலும் மேலும் புகைப்பிடிப்பர். சிலர் புகைபிடிப்பதால் ஞாபகசக்தி கூடுகின்றது என்பர் இது தவறான முடிவாகும். சிலர் புகைப்பிடிப்பதால் மனம் ஆறுதல் அடைகின்றது என்பர் இதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. மனதில் ஏற்படும் குறைபாடுகளை வெளியில் கூற விரும பாத நிலையில், அல்லது வெளியில் கூறமுயாத சூழலில் உள்ள போது அல்லது தனிமையில் உள்ளபோது மனதிற்கு வைக்கப படுகின்ற கொள்ளியே புகைத்தல் ஆகும். சிலர் புகைப்பிடிப்பதால் சந்தோஷமான மன்நிலையை அடையும் நம்பிகையில் புகைககின்றனர். இது ஒரு உளவியல் பிரமை ஆகும். இது திரைப்படங்கள், தொலைக்கட்சி நாடகங்கள், விளம்பரங்கள் என்பவற்றால் ஏற்பட்ட விளைவாகும். உடல் ஆரோக்கியமான விளையாட்டு வீரர்களையோ, கடற்படைவீரரையோ, நடிகர்களையோ மையப் படுத்தி புகைததல் தொடர்பான விளம்பரங்கள் எடுக்கப்படுகின்றன.

இதனை பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், கிரமம் தவறாது காட்சிப்படுத்துகின்றன. இதனைப் பார்க்கும் சாதாரண மனிதன் புகையை வாயில் வைத்தால் தானும் அந்த நடிகா அல்லது விளையாட்டுவீரன் என்ற நிலையில் சந்தோஷப்படலாம். ஆனால், புகைத்து கசநோயாளியாகிவனையோ, புகைத்தலினால் புற்றுநோய் ஏற்பட்டு அவதிப்படுபவனையோ, புகைத்தலுடன் காட்சிப்படுத்தினால் மறுகணமே புகைத்தல் பற்றிய மிகை எழுச்சி நிலை நின்றுவிடும்.

மேலும் சிலர் புகைப்பிடிப்பதால் கிரகித்தல் தன்மை கூடும் என நினைக்கின்றனர். இது தவறானது. விளம்பரங்களால் ஏற்பட்ட நம்பிக்கை.

தவறான உளவியல் நம்பிக்கைகளாலும் உடல் இரசாயனப் பதார்த்தத்திற்கு அடிமைப்படுவதாலும் புகைத்தலை நிப்பாட்டல் என எண்ணல் புகைத்தலை துறத்தலைவிட கடினமானதாக இருக்கும்.

"கடிது கடிது புகைத்தல் துறத தல் - மிகக் கடிது துறத்தல் எண்ணல்"

## விழிப்புணர்வு அவசியம்

புகைப்பிடித்தலை முற்றாகத் தடுத்க்க சமூக மட்டத்தில் விழிப்புணர்வு அவசியம். இதில் ஊடகங்களின் பங்கு 90% க்கு மேல திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றில் புகைத்தல் தொடர்பான காட்சிகளோ, விளம்பரங்களோ அனுமதிக்கப் படலாகாது.

வர்த்தகர்கள் புகைத்தலை ஊக்குவிக்கும் வகையில் செயற்படக்கூடாது. மேலும் "புகைத்தல உடல் நலத்திற்கு கேடாகலாம்" என்ற விளம்பரத்தால் தம்மைத் தாமே அழிக்கும் மன நிலையில் உள்ளவர்கள் அதனை மேலும் மேலும் பாவிப்பர். இது ஒரு எதிர் மறையான விளைவாகும்.

கிராம மட்டத்தில் சன சமூக நிலையங்கள் புகைத்தல் விலத்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். முற்றும் வேலைத்தளங்கள், தேனீர்ச்சாலைகள், களியாட்ட இடங்கள் என்பன விசேடமாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய இடஙகளாகும்.

இறுதியாக புகைத்தலை தடை செய்வதாலேயே ஒரு நாடு முன்னேறமுடியும். புகைத்தல் பாவனையால் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வரியைவிட ஆயிரம் மடங்கு செலவு புகைத்தலால் வரும் நோய நிலையில் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் உழைப்புதிறன் குன்றுகின்றது. இதனை நன்கு உணர்ந்த முதலாளித்துவ நாடுகள் புகை வடிவில் நோயினையும் ஏற்றுமதி செய்து, அதற்கு தேவையான மருந்துகளையும் ஏற்றமதி செய்கின்றது. இதனால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தொடர்ந்தும் கடனாளியாக இருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

புகைத்தல தடைச்சட்டம் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதது.

**டாக்டர் சி.யமுனாநந்தா**

ஏனெனில் ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்கவும், சமூக வன்முறைகளை கட்டுப்படுத்தவும், பொருளாதார நிலையை மேன்படுத்தவும் இது அவசியம்.

கொலம்பஸ், அமெரிக்காவை கண்டுபிடித்தபோது இங்கிலாந்து மகாராணிக்கு கிடைத்த பரிசே புகைக்குப் பழக்கம், அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என இங்கிலாந்தின் காலனித்துவ நாடுகளிலும் புகைத்தல்பரவியது இன்று காலனித்துவம் அழிந்து விட்டது. ஆனால் அதனால் வந்த பழக்கம் அழியவில்லை அவ்வாறு அழியாதாயின எமது காலசாரம் அழிவதற்கு காரணமாக அமையும்.

# புலிகளிடமிருந்து அரசியல்வாதிகள் தகுந்த பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்-தீப்திகுமார

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்து நிரூபித்துள்ளனதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து அரசியல் தலைவர்கள் பாடம் கற்க வேண்டும் என்று அரசியல் நோக்கர் தீப்தி குமார குணரட்ன கருத்து தெரிவித்துள்ளார்.தமிழர் தாயகப் பகுதிகளில் வர்க்களிப்பு வீதம் படுவீழ்ச்சியடைந்திருப்பதைச் சுட்டிக் காட்டி அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு எதுவித அறிவுறுத்தலும் விடுக்காத நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை நம்பியிருந்த ரணிலின் வெற்றியில் இன்றைய வாக்கு வீத வீழ்ச்சி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரணில் விக்கிரம சிங்காவின் தேர்தல் பரப்புரை முழுவதும் தமிழ் மக்களின் வாக்குகளை நம்பியதாக இருந்தது. வடக்கு-கிழக்கு வாக்குகள் தமக்கு கிடைக்கும் என்று நம்பியிருந்தார். ஆனால் விடுதலைப் புலிகள் வித்தியாசமான அணுகு முறையை கையாண்டுள்ளனர். அவர்கள் அதை நிரூபித்தும் இருக்கிறார்கள். இந்த தேர்தல் மூலம் சிங்கள அரசியல் தலைவர்கள்- சிங்கள தலைவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம இது ஒன்றுதான் என்று அவர் கூறியுள்ளார். (ச)

# அம்பாறையில் குண்டு வெடிப்பு இரு இளைஞர்கள் ஸ்தலத்தில் பலி

## 4 சிறுவர்கள் உட்பட ஐவர் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பில் நேற்று பிற்பகல் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் இரு இளைஞர்கள் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். 4 சிறுவர்கள் உட்பட 5 பேர் காயமடைந்து கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


வெடி குண்டை வீட்டில் தயாரித்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடந்ததாகவும் காயமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

பாண்டிருப்பைச் சேர்ந்த கந்தசாமி நிரோசன்(வயது-28) கல்முனையைச் சேர்ந்த எஸ்.சத்தியன் (வயது-26) ஆகிய இருவருமே உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர் ஆர். சந்திரன் (வயது-38) அவரது பிள்ளைகளான பிரியன்(வயது-8) விதுசா(வயது-9) மதுவன் (வயது-2) மற்றும் பி.ரக்சன (வயது-9) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. இந்த குண்டு வெடிப்பு சத்தத்தினால் பாண்டிருப்புக் கிராமமே அதிர்ந்ததாக அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர். (ச-4,8)

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் பேருந்து சேதம் சாரதி படுகாயம்




யாழ்.நகரில் நேற்று சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் ஒன்று இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டதில் பஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக்காலை 10.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாக இடம்பெற்றது.

நேற்றுக்காலை காரைநகர் டிப்போவில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்.பஸ்நிலையம் நோக்கி வந்துகொண்டிருந்தவேளை பயணிகள் சிலரை வைத்தியசாலையில் இறக்குவதற்கு பஸ்ஸை நிறுத்திய வேளையிலேயே இனந்தெரியாத சிலர் கல்லினாலும், கொட்டனாலும் தூரத்தில் நின்று தாக்குதல் நடத்தியதில் பஸ் கண்ணாடிகள் நொருங்கியதோடு பஸ்சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதானாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் பயணிகள் எவரும் காயமடையவில்லை.

இச் சம்பவத்தில் சுழிபுரத்தைச சேர்ந்த கே.மனோகரன் என்ற பஸ் சாரதியே காயமடைந்தவராவார். இச் சம்பவ இடத்திற்கு யாழ். பொலிஸாா வருகைதந்து சம்பவத்தில் சேதமடைந்த பஸ்ஸை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச சென்றனா். (அ-19)

## இராணுவச் சிறைக் கைதிகள் தப்பிச் சென்றனர்

குருநாகல் பகுதியில் அமைந்துள்ள இராணுவத் தடுப்பு முகாமிலிருந்து 12 இராணுவ சிறைக் கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர். தடுப்பு முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளை அச்சுறுத்திவிட்டு 13பேரும் தப்பிச் சென்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரண தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற படையினரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் ஏனையவர்களை கைதுசெயவதற்கு பொலிஸநிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் நளின விதாரண தெரிவித்துள்ளார்.(அ-08)

## பொலிஸார் நடவடிக்கை

கண்டி வீதியும் கச்சேரி நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் துவிச்சக்கிர வண்டியில் சமாந்தரமாக சென்ற இருவரை பொலிஸார் வழிமறித்து அவர்கள் சென்ற துவிச்சக்கரவண்டிகளில் ஒன்றை பறிமுதல் செய்ததுடன் ஒரு துவிச்சக்கர வண்டியில் செல்லுமாறு அனுப்பிவைத்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. (ஙு-132,133)

## கும்பாபிஷேகம்

புலோலி தெற்கு சாரையடி வீரபத்திரர் கோவில் வருடாந்த கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் பிரதம குரு கோ.தண்டாயுதபாணி தேசிகர் தலைமையில் இப் பெருவிழா நடைபெறவுள்ளது. (ஙு-25)

## இலையான் பெருக்கம்

சாவகச்சேரி பிரதேசத்தில் இலையான் பெருக்கம் அதிகரித்துள்ளது. வீடுகள், கடைகள் போன்ற அனைத்து இடங்களிலும் இலையான் பெருகியுள்ளது.

இரவில்கூட இலையான் தொல்லையாகவுள்ளது. இதனால் நோய் தொற்று ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. இதைத் தடைசெய்வதற்கு எந்தவிதமான மருந்துகளும் இங்கு கிடைப்பதில்லை. எனவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஙு-108)

## தலைமைத்துவப் பயிற்சி நெறி

எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவிருந்த இன்ரறக்ட் கழக உறுப்பினர்களுக்கான 'தலைமைத்துவ பயிற்சி நெறி' தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என நல்லூர் றோட்டறக்ட் கழகத்தலைவர் கே.ஓ.றூபன அறிவித்துள்ளார்.

## இராசி பலன்

**18.11.2005**
(கார்த்திகை 03, வெள்ளிக்கிழமை)
துதியை முற்பகல் 6.34 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 3.38 மணிவரை
இராகுகாலம்- 10.38 - 12.08 மணிவரை
சுபநேரம் - 6.08- 7.38 மணிவரை
சித்தம்

- **மேடம்** — தேக ஆரோக்கியம், எடுத்தகாரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, புதிய திருப்பம்.
- **இடபம்** — முயற்சி தாமதம், குடும்பக்கவலை, வேலைச சுமை, ஆரோக்கியக்குறைவு.
- **மிதுனம்** — உடல் சோர்வு, தொழில் ஆர்வம், வாகன சுகம், உறவினர் சந்திப்பு.
- **கடகம்** — பிரயாண நன்மை, நினைத்தகாரியம் கைகூடும், தனலாபம், வாக்குமேன்மை.
- **சிங்கம்** — கற்பனை மிகுதி, விவாதம், காரிய தாமதம், அதிக செலவு.
- **கன்னி** — நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், நல்ல முயற்சி, போசனசுகம்.
- **துலாம்** — உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, சயன சுகக்குறைவு, சுபசெலவு.
- **விருச்சிகம்** — எடுத்த காரியம் கைகூடும், உறவினர் உதவி, போசனசுகம், பணவருவாய்.
- **தனுசு** — புதிய விடயம், தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி, காரியஅனுகூலம்.
- **மகரம்** — அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சி தாமதம்.
- **கும்பம்** — புனல் வியாதி, வீண்பிரச்சினை, வாகன பயணம், வேலைச்சுமை.
- **மீனம்** — திடீர் பயணம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# முன்பள்ளிகளின் கலைவிழா

"மழலைச் செல்வங்களின் இனிமையான தித்திக்கும் மொழியைக் கேட்டும் அவர்களது ஆடல்பாடல்களைக் கண்டுகளித்தும் எம்மை மகிழவைத்து ஆனந்தக்கடலில் ஆழ்த்தி, உலகத்துன்பங்களையும் வாழ்வுப் பிரச்சினைகளையும் சற்றே மறக்கச்செய்த பெருமை யாழ்.பாலர் கல்விக் கழகத்துகேயுரியது."

யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிறு நடைபெற்ற பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள பதினாறு பாலர் முன்பள்ளிகள் இணைந்து நடத்திய கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட "வலம்புரி" நாளிதழ் நிர்வாக இயக்குநர் வெற்றிவேலாயுதம் தமதுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். கள்ளங்கபடமற்ற பாலர்கள் கலந்துகொள்ளும் கலை நிகழ்வுகளைத் தயாரித்து வழங்கிய பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கும் அதை நிர்வகிக்கும் பாலர் கல்விக் கழகத்துக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நாற்பது ஆண்டுகள் நற்பணிபுரியும் இந்தக் கழகத்தை ஸ்தாபித்த அமரர் இரத்தின கோபால் மற்றும் இன்றைய தலைவர் திருமதி சறோஜினி ஜெயபாலசிங்கம், பத்திராதிபர் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் ஆகியோர் ஆற்றிவருகின்ற பணி பாராட்டப்படவேண்டியது.

அவர்கள் அனைவரும் கழக உறுப்பினர்களும் சேர்ந்து ஒற்றுமையாகச் சேவை மானப்பான்மையுடன் எவ்வளவோ பிரச்சினையுள்ள இன்றைய கால கட்டத்தில் இப்படி ஒரு கலை விழாவை நடாத்துவதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.


அவர்களது பணி தொடர்ந்து சிறப்புற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன் என்றார்.

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமான இக்கலைவிழாவில் கழக உறுப்பினர்களும் மற்றும் பல பிரமுகர்களும் ஏராளமான பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.


இந்தக் கலைவிழாவில் பதினாறு பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த பாலர்கள் இணைந்து பல கதம்ப நிகழ்ச்சிகளை வழங்கினர். போட்டி நிகழ்வில் பங்கேற்று வெற்றியீட்டிய முன்பள்ளிகளுக்குரிய ஆசிரியைகளுக்குப் பிரதம விருந்தினர் வெற்றி வேலாயுதம் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார்.

கழக உப தலைவர் ஆசிரியர் காசிநாதனின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்தியது. (அ)

# தேர்தலை மக்கள் புறக்கணித்ததால் வெறிச்சோடிய யாழ்ப்பாண நகரம்










நேற்று நடைபெற்ற இலங்கை ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஸ்கரித்ததன் விளைவால் யாழ்.நகரில் உள்ள வாக்களிப்பு நிலையங்கள் அத்துடன் வர்த்தக நிலையங்கள், பஸ் நிலையம் மற்றும் வீதிகள் யாவும் வெறிச்சோடிக்கிடப்பதைப் படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## நடக்கலாமா?

காலை நேரம் கடற்கரையோரம் காலையும், கையையும் வீசிக்கொண்டு ஏதோ சண்டைக்குப் போகும் சிப்பாய் மாதிரி எல்லோரும் நடந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். அதில் எனக்குத் தெரிந்த ஒருவர் மிக வேகமாக எதிரே வந்தார். "என்ன சார் வாக்கிங்கா?" என்று கேட்டேன். அவரால் 'ஆமாம்' என்று பதில் சொல்ல முடியவில்லை. அவ்வளவு கஷ்டம் மூச்சு விடுவதற்கே வாயைத்திறந்து திறந்து மூடிக்கொண்டிருந்தார். கொஞ்சம் நின்று நிதானித்து மூச்சு விட்டுவிட்டு அதன்பின் 'ஆமாம்' என்றார்.

"என்ன சார் இவ்வளவு வேகம்?" என்றேன். 'உங்கள் பேச்சைக் கேட்டுவிட்டுத்தான் சார் நடக்க ஆரம்பித்தேன். ஒரு நாள் இன்று ஒரு தகவலில் கேட்டேன் நடப்பது நல்லது என்று. அன்றிலிருந்தே ஆரம்பித்து விட்டேன் ஆனாலும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது சார். இப்போது பாருங்கள் உங்களிடம் சுலபமாகப் பேசமுடியவில்லை. மூச்சு வாங்குகிறது. உடல் கூட வலிப்பது போலிருக்கிறது" என்றார்.

"உங்களை யார் சார்... இவ்வளவு வேகமாக நடக்கச் சொன்னது? வேகத்தைக் குறையுங்கள்... மெதுவாக நடவுங்கள்" என்றேன். "நீங்கள் நடப்பதனால் என்னென்ன சௌகரியங்கள் என்று அன்று கூறினீர்களே தவிர, சௌகரியமாக நடப்பது எப்படி என்று கூறினீர்களா? சார்" என்றார் அவர் இன்னும் லேசாக மூச்சு வாங்கிக்கொண்டே, மூச்சு வாங்கிக் கொண்டு சொன்னாலும்கூட இவர் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கிறது. அதனால் நடைப் பயிற்சி செய்பவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கியமான குறிப்புகள் என்னென்ன என்பதைப்பற்றி இன்றையதினம் தெரிந்துகொள்ளலாம்.

உங்கள் வயது 40 இற்கு மேலேயா? உங்கள் எடை இருக்க வேண்டிய எடையைவிட 10 கிலோ அதிகமாக இருக்கிறதா? நீங்கள் புகைபிடிப்பவரா? இதயநோய் இரத்த நாளநோய், உயர் இரத்த அழுத்தம் இப்படி ஏதாவது உங்களுக்கு உண்டா? அப்படியென்றால் நீங்கள் உங்கள் இஸ்டத்திற்கு வரிந்துகட்டிக்கொண்டு நடைப் பயிற்சிசெய்ய ஆரம்பித்து விடாதீர்கள். முதலில் ஒரு மருத்துவ பரிசோதனை செய்யுங்கள் அதுதான் நல்லது.

நடக்கும்போது-உடற்பயிற்சி செய்யும்போது மார்புப் பகுதியில் அல்லது வேறு எங்கேயாவது தொடர்ந்து வலி இருந்தால் பயிறசியை நிறுத்திவிட்டு டாக்டரைப் போய்ப்பாருங்களள. நடைப்பயிற்சி செய்யும்போது உங்கள் சக்திக்குத் தகுந்த மாதிரி மெதுவாக அதிக கஷ்டமில்லாமல் முன்னேறுங்கள் சார்...! அங்கே என்ன போட்டியா வைக்கிறார்கள்? முந்திக் கொண்டு போய் பரிசுவாங்குவதற்கு? தொந்தரவு கொடுக்காத சப்பாத்து, உடை இவற்றைப்பயன்படுத்துங்கள் பாதத்தில் ஆடுதசையில் ஏதாவது பிரச்சினை இருந்தால் டாக்டரைப் பாருங்கள்.

வெய்யில் காலமாக இருந்தால் தலைக்குத் தொப்பிவைத்துக்கொள்ளுங்கள். பனியில் நடந்தாலும் அப்படித்தான் தலையைப் பத்திரமாக பார்த்துக்கொள்ளுங்கள் நம்மிடம் ஏதோ கொஞ்சம் உருப்படியாக தெரிவது அதுதான் உடற்பயிற்சிக்கு முன்பும் பின்பும் பயிற்சி செய்யும்போதும் நிறைய தண்ணீர் குடிக்கலாமாம். முதல் ஒரு மாதத்திற்கு கொஞ்சம் தளர்த்தியாக..: சாவகாசமாக நடக்கலாம். மணிக்கு 3 அல்லது 4 கிலோ மீற்றர் வேகம் என்று வைத்துக்கொள்ளுங்களேன். அதன்பின் வேகத்தை அதிகப்படுத்தலாம் மணிக்கு 6 அலலது 8 கிலோ மீற்றர் அளவுக்கு நடக்கலாம். நன்றாக கையை வீசிக்கொண்டு நடக்கலாம். மூச்சுவிடும் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். இதுபோல் ஒரு 30 நிமிடம் நடக்கலாம்.

தனியாக நடந்து போவதற்கு உங்களுக்கு என்னவோ மாதிரி இருக்கிறதா? கூட யாரையாவது சேர்த்துக்கொள்ளுங்களள. ஒரு குழுவாகக்கூட போகலாம். நடப்பதென்பதை ஒரு சந்தோஷமான சமாச்சாரம் ஆக்கிக்கொள்ளுங்கள். தினம் இப்படி நடக்க வேண்டியிருக்கிறதேயென்று புலம்பிக்கொண்டே போகாதீர்கள். சிலபேர் நடக்கும்போது கடந்த காலத்தை அசைபோட்டுக்கொண்டே போவார்கள். சில பேர் வருங்காலத்தை அசைபோட்டுக்கொண்டே போவார்கள். சில பேர் முக்கியமான திட்டங்களை நடக்கும் போதுதான் தீர்மானம் செய்வார்கள்.

நடப்பதால் மன இறுக்கம் குறையும். பரபரப்பு குறையும். மன ஆற்றல் பெருகும். தன்னம்பிக்கைவளரும். முதுமை தள்ளிப்போகும். செயல்திறன் அதிகரிக்கும். இதைத்தவிர உடலுக்கும் பலவிதமான சௌகரியங்கள் ஏற்படும். அதனால்... இதுவரைக்கும் நடக்க ஆரம்பிக்காதவர்கள் இன்றைய தகவலில் உள்ள குறிப்புக்களை கவனத்தில் வைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்துவிடலாம்.

சார்லஸ் லேம்ப் என்ற ஆங்கில இலக்கிய மேதை ஒருமுறை உடல்நிலை சரியில்லை என்று டாக்டரிடம் போனாராம். டாக்டர் அவரைப் பார்த்துவிட்டு "நீங்கள் தினமும் காலையில் வெறும் வயிற்றில் நடக்கவேண்டும்" என்றாராம் "வெறும் வயிற்றில் நடப்பதற்கு நான் தயார்.. ஆனால் வயிறுகிடைக்க வேண்டுமே! யார் வயிற்றின்மேல் நடப்பது டாக்டர்?" என்று கேட்டாராம் அந்த இலக்கிய மேதை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளின் பெயரில் துண்டுப்பிரசுரம் விநியோகித்த மூவர் ஈ.பி.டி.பி உறுப்பினர் எனத் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விடுதலைப்புலிகளின் பெயரில் மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரங்களை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினரே விநியோகித்தது அம்பலமாகி உள்ளது.

தேர்தலைப் புறக்கணிக்கக்கோரும் துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்ததாக மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் கைதுசெய்யப்பட்ட மூவரும் ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் என தெரியவந்துள்ளது.

பெரியகல்லாறு வாசியான ஜோன்சன் ஜெயகாந்தன், அக்கரைப்பற்று வாசியான இராமலிங்கம் யோகராஜா, கருவப்பன்கேணி வாசியான பிரகாசம் சகாயமணி ஆகியோர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் ஆவார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் இந்த மூவரும் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

வாக்களிக்கும் உரிமைகளைத் தடுக்கும் வகையில் தேர்தல் சட்டத்தை மீறியதாக நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தனர். தலா ரூபா 10ஆயிரம் ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி மீண்டும் எதிர்வரும் டிசம்பர் 16ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

இந்த நபர்களை விடுதலைசெய்ய வேண்டும் என பொலிஸாருக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் அழுத்தங்கள் வந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் கூறியதாவது,

மட்டக்களப்பு நகரிலிருந்து கல்முனைக்கு இவர்கள் பயணம்செய்த வாகனம் களுவாஞ்சிக்குடியில் விசேட அதிரடிப்படையின் வீதித் தடையினால் சோதனையிடப்பட்டது. அப்போது துண்டுப்பிரசுரங்கள் 1600 கண்டெடுக்கப்பட்டன. விடுதலைப்புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறை என அந்த துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது என்று கூறினர்.

ஜோன்சன் ஜெயகாந்தன் தன்னை விடுதலைப் புலி எனக் கூறி கழுத்தில் சயனைட் அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிணையில் விடுதலையாகி உள்ள மூவரில் ஜோன்சன் ஜெயகாந்தன் என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி அம்பாறை மாவட்டம் தம்பட்டையில் விடுதலைப்புலிகளின் மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் குவேனி உட்பட 3 பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற மறுநாள் கல்முனையில் இவரது நடமாட்டம் அவதானிக்கப்பட்டு விடுதலைப்புலிகளினால் பிடிக்கமுற்பட்ட போது ஓடிச் சென்று கார்மேல் பற்றிமா கல்லூரி அகதி முகாமுக்குள் நுழைந்துகொண்டார். அங்கு இருந்த விசேட அதிரடிப்படையினரிடம் சில மாதங்களுக்கு முன்புதான தான் வெளிநாட்டிலிருந்து வந்ததாகக் கூறி தஞ்சமடைந்தவர் என்றும் தெரியவந்துள்ளது. (அ-33)

# துணுக்காய் - பூவரசங்குள வீதிப் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துணுக்காய்-பூவரசன்குளம் வீதியைச் செப்பனிட, வன்னி புனர்வாழ்வு அமைச்சு (RRR) 21 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேசத்தையும் வவுனியா மாவட்டத்தையும், இணைக்கும் துணுக்காய் பூவரசன் குள வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தாமான மிகப் பிரதான வீதியாகும். பல வருடங்களாக இவ் வீதி செப்பனிடப்படாததால் பொது மக்களோ, வாகனங்களோ செல்ல முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளது. சுமார், 32கிலோ, மீற்றர் நீளமான இவ் வீதியைச் செப்பனிட, ஒதுக்கப்பட்ட பணம் 03 கிமீ.தூரத்துக்கு மாத்திரமே போதுமானது.

"A-9" பிரதான பாதை மூடப்பட்டிருந்த நெருக்கடியான காலகட்டத்தில் வவுனியாவில் இருந்த வன்னி ஊடாகப் பிரயாணம் செய்யப் பயன்படுத்தப்பட்ட மிக இலகுவான பாதை இதுவாகவேயிருந்தது. இப்பாதையை மூன்று முறிப்பு என்னும் இடத்தில் வைத்து பறங்கியற்றுப்பாலம் பிரிக்கின்றது. இப்பாலம் நெக்கோட் நிறுவனத்தால் 35இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டதாயினும் 1999ஆம் ஆண்டு றணகோச இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தால் நகர்க்கப்பட்டுவிட்டது. மீண்டும் இப்பாலம் புனரமைப்புச் செய்யப்படாததால் துணுக்காய்-பூவரசம் குளம் வீதியூடாக வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டேயுள்ளது.

இப் பிரதான வீதியும் சேதமாக்கப்பட்ட பாலமும் புனரமைப்புச் செய்து இப்பிரதேச மக்களின் போக்குவரத்துக்கு உதவ சம்பந்தப்பட்ட திணைக்களம் முனவரவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (128)

# திருநெல்வேலி - செங்குந்தா சந்தை மரக்கறி வியாபாரிகள் பகிஷ்கரிப்பு

திருநெல்வேலி, செங்குந்தா சந்தைகளில் விற்பனைக்காகக்கொண்டுவரப்படும் மரக்கறிவகைகளுக்கு வரி அறவிடப்படுவதை எதிர்த்து, அச்சந்தைகளின் மரக்கறி வியாபாரிகள் நேற்றுமுன்தினம் தமது வியாபார நடவடிக்கைகளை நிறுத்திப் பகிஷ்கார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சந்தைகளின் புதிய குத்தகை ஆரம்பமானதும் சந்தையில் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் மீன், மரக்கறி வகைகளுக்கு வழமையான கொடுப்பனவுக் கட்டணங்களுக்கு மேலாக ஒருகிலோவுக்கு இவ்வளவு என வரி அறவிடும் நடவடிக்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு வழமையாகச் செலுத்தப்படும் இடவாடகை முதலான கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக விற்பனைக்குக் கொண்டுவரப்படும் பொருட்களுக்கு வரி விதிப்பதால் தங்களுக்கு இலாபம் எதுவும் கிடைப்பதில்லை என்பதனாலேயே மரக்கறி வியாபாரிகள் இப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை,செங்குந்தாச் சந்தையில் மீன் வியாபாரிகள் பகிஷ்கரிப்பில் ஈடுபடாததால் மீன் வியாபாரம் மும்முரமாக நடைபெற்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (அ)

# வாகனம் மோதியதில் இரு பெண்கள் பலி

(கொழும்பு)

கொழும்பு நுகேகொட பிரதான வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர். இவ்விரு பெண்களும் வீதியைக் கடக்க முற்பட்டவேளையில் வாகனம் மோதியதால் உயிரிழந்துள்ளனர். இவர்களை மோதிய வாகனம் நிறுத்தப்படாமல் சென்றுவிட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-08)

# விட்டோடிகள் 300 பேரை யாழ்.அனுப்பும் முயற்சியைத் தடுத்தது பாதுகாப்பு அமைச்சு

இராணுவத்திலிருந்து விட்டோடியவர்கள் 300 பேர்களை விமான மூலம் யாழ்ப்பாணம் அனுப்பும் முயற்சியை பாதுகாப்பு அமைச்சு தடுத்து நிறுத்தியுள்ளது. வாக்களிப்பு நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்தி தேர்தலை குளறுபடியாக்க எடுக்கவிருந்த இந்த நடவடிக்கைகளை தடுக்குமாறு ஐ.தே.க., ஜனாதிபதி குமாரதுங்கவையும் பாதுகாப்பு அமைச்சையும் கேட்டிருந்தது. 300 பேர்களுக்கான பயணச்சீட்டுப் பணம் விமான நிறுவனம் ஒன்றுக்கும், பயணிக்கவிருப்பவர்களின் பெயர்ப்பட்டியலுடன் நிழலபடங்கள் பாதுகாப்பு செயலாளர் அசோகா ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.க. இதுதொடாபில் தேர்தல் ஆணையாளருக்கு தமது ஆட்சேபனையை தெரிவித்திருந்தது. மக்கள் தமது வாக்குரிமையை பாதுகாப்பதுடன், தேர்தலைக் குழப்பும் நடவடிக்கைகளை முறியடிக்கும்படியும் ஐ.தே.க.விடுத்த கோரிக்கையை ஏற்று பாதுகாப்பு அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

# இராணுவச் சீருடைகள் வைத்திருந்ததாக கொழும்பு ரயிலில் தமிழ் இளைஞன் கைது

கொழும்பு செல்லும் ரயில்களில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின் போது இராணுவ சீருடைகள் வைத்திருந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


வெயங்கொடைக்கும் ராகமைக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் இரவு 8 மணிவரை ரயில்கள் சோதனையிடப்பட்டன.

அப்போது வவுனியாவிலிருந்து கொழும்பு வந்த யாழ்.தேவி ரயிலில் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரிடம் சோதனை நடத்தப்பட்டதாகவும் அவர் இராணுவ சீருடையை மறைத்து வைத்திருந்ததாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

50இராணுவத்தினரும், 50பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலின் போது மட்டக்களப்பு, வவுனியா, பதுளை, கண்டி உட்பட கொழுமபிற்கு வரும் சுமார் 30ரயில்கள் சோதனையிடப்பட்டன.

இதன்போது சுமார் சந்தேகத்தின் பேரில் 15பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ராகமை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# பொய்யர்களை கண்டுபிடிக்க புதுவழி...



பொய் சொல்பவர்களைக் கண்டுபிடிக்க 'பாலிகிராப் டெஸ்ட்' என்ற சோதனை நடைமுறையில் உள்ளது. ஆனால் இதில் துல்லியமான முடிவு கிடைப்பதில்லை என்று பல தரப்பிலும் புகார்கள் உள்ளன.

இத்தகைய நிலையில் பாலிகிராப் டெஸ்டுடன், வயிற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டுபிடிக்கும் சோதனையையும் செய்தால் ரிசல்ட் நன்றாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கேல்வஸ்டனில் உள்ள டெக்சாஸ் மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பங்கஜ் பாஸ்ரிச்சா தலைமையிலான குழுவினர் பொய்யர்களைக் கண்டுபிடிக்க உணவுக் குழாய் பாதை மாற்றங்கள் கைகொடுக்குமா? என்று அறிய ஆய்வு செய்தனர்.

இதில் கலந்துகொண்ட 16 பேருக்கும் எலக்ட்ரோகேஸ்ட்ரோகிராம் (உணவுக் குழாய் பாதை மாற்றங்களை அறிய உதவும் சோதனை) எடுக்கப்பட்டது. அப்போது பொய் சொன்னவர்களின் ஜீரணப் பாதையில் அலைகளின் வேகம் குறைந்தது தெரிய வந்தது.

ஒருவர் பொய் சொல்லும்போது இருதயத் துடிப்பு கண்டபடி அதிகரிக்கும் என்பது உண்மைதான். இருப்பினும் வேறு சில உடல்நலக் கோளாறுகளும் இதற்குக் காரணமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இத்தகைய நிலையில் இருதயத் துடிப்பை மட்டுமே வைத்து உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது.

ஆகையால் உண்மையிலேயே அண்டப் புளுகு ஆகாசப் புளுகு விடுபவர்களை உடல் ரீதியாக ஏற்படும் சில தன்னிச்சையான மாற்றங்களை வைத்துக் கண்டுபிடிக்கலாம் என்று டாக்டர் பாஸ்ரிச்சா கூறியுள்ளார்.

எலக்ட்ரோகேஸ்ட்ரோகிராம் என்பது வலியில்லாத ஒரு எளிய சோதனை என்பது குறிப்பிடத்தக்கது.



# முத்திரை விஞ்ஞானம்

மாற்று மருத்துவ முறைகளில் தற்போது முத்திரை விஞ்ஞானம் பிரபலமாகி வருகின்றது. தெற்காசிய நாடுகளில் மட்டுமே குறிப்பாக இந்தியாவில் மட்டுமே பிரபலமாக இருந்த இந்த மருத்துவ விஞ்ஞானம் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது.

முத்திரை விஞ்ஞானம் மொஹஞ்சதாரோ புதை பெருள் படிவங்களிலேயே பாரம்பரிய பழமையைப் பறை சாற்றுவதாக முத்திரை விஞ்ஞான நிபுணர்கள் கூறுகின்றனர். டெல்லியில் ஆச்சர்ய கேசவ் தேவ் முத்திரை விஞ்ஞானம் குறித்து விரிவான ஆய்வுகளை நடத்தினார். இந்த முத்திரை விஞ்ஞானம் ஐம்பூதங்கள் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஐந்து விரல்களும் ஐம்பூதங்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. கட்டை விரல், ஆள்காட்டி விரல் ஆகியன முறையே நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி, நீர் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்படுகின்றன.

வலது கையால் முத்திரை செய்தால் உடலின் இடது பக்கமும், இடது கையால் முத்திரை செய்தால் உடலின் வலது பக்கமும் பயன்பெறும் என ஆச்சர்ய கேசவ் தேவ் கூறுகிறார்.

ஞான முத்திரை, ஆகாச முத்திரை, வருண முத்திரை, சங்க முத்திரை, பிருதவி முத்திரை, சூரிய முத்திரை, சூன்ய முத்திரை, லிங்க முத்திரை, ஜலோதர் நாசுக முத்திரை போன்ற சமஸ்கிருத சொற்கள் ஐரோப்பிய நாடுகளிலும் அப்படியே பின்பற்றப்படுகின்றன. வயது வேறுபாடின்றி இந்த முத்திரை விஞ்ஞானம் அனைவருக்கும் பரிந்துரை செய்யப் படுகின்றது.

# குண்டா இருந்தாலும் ஈரலுக்கு ஆபத்துதான்...!



தண்ணி அடித்தால்த் தான் ஈரல் கெட்டுப் போக வேண்டுமென்பதில்லை. உடல் பருமனாக இருந்தால் கூட ஈரல் கெட்டுப்போகுமாம்.

மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மதுப் பழக்கம் உள்ள 1000ற்கும் மேற்பட்டவர்களை வைத்து ஆய்வு நடத்தியபோது இதுவரை வெளிவராத பல உண்மைகள் தெரிய வந்துள்ளன.

மிதமானது முதல் மொடாக் குடி பழக்கம் உள்ளவர்களுக்கு ஈரல் கெட்டுப் போக 2 மடங்கு வாய்ப்பு இருக்கிறது என்றால் உடல் பருமன் இன்னும் கூடுதலான பாதிப்பை உண்டாக்குகிறது.

மது வாடையே இல்லாமல் இருந்து உடல் பருமனாக இருந்தால் ஈரல் கெட்டுப் போக 7 மடங்கு வாய்ப்பு இருக்கிறதாம். இப்போது கூடுதல் பாதிப்பு எது? எனத் தெரிந் திருக்குமே.

உடல் பருமனாக இருந்தால் ஈரலுக்கு ஏற்கனவே ஒரு பாதிப்பு உள்ளது. இந்நிலையில் மதுப் பழக்கமும் கூடுதலாக இருந்தால் ஈரலை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குகிறீர்கள் என்பது தான் அர்த்தம். அவதானம்!!

## அறிவியல் ஆயிரம்

# கர்ப்பிணி சிகரெட் புகைத்தால் குழந்தைக்கு நீரிழிவு வரும்...!





சிகரெட் புகைத்தால் புகைப்பவருக்கு மட்டும் நோய் வரலாம்; ஆஸ்துமா வரலாம் என்பது தெரிந்த சங்கதி. ஆனால் வேட்டொன்னே தெரியுமா? கர்ப்பிணிகள் சிகரெட் புகைத்தால் பிறக்கும் குழந்தைக்கு பின்னாளில் நீரிழிவு உடல் பருமன் போன்ற ஆபத்தான சிக்கல்கள் உண்டாகும் வாய்ப்பு இருக்கிறதாம்.

சுவீடன் விஞ்ஞானிகள் இந்தத் தகவலைக் கூறியுள்ளனர்.

சிகரெட் புகைக்கும் கர்ப்பிணிகளின் பிள்ளைகளுக்கு 33 வயதில் நீரிழிவு அல்லது உடல் பருமனோ ஏற்பட வாய்ப்பு இருக்கிறதாம். கர்ப்பத்தில் உள்ள கருக்குழந்தைக்கு ஊட்டச்சத்துக் குறைபாடும் ஏற்படுகிறதாம்.

சுமார் 17 ஆயிரம் குழந்தைகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் இந்த உண்மைகள் தெரிய வந்துள்ளன. இதுவரை சிகரெட் புகைக்கும் இளம் ஜோடிகளுக்கும் பிற்காலத்தில் நீரிழிவு வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாம்.

# உள்ளங்கையில் உலகம்




ஒரு வீட்டின் முகவரியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமானால் தெருவில் இருக்கும் மின்கம்பங்களையும் வளர்ந்திருக்கும் மரங்களையும் தவிர அத்தனை பேரிடமும் கேட்டுக்கேட்டுச் செல்வோம். பக்கத்தில் இருக்கும் ஒரு முகவரி கூட பரிச்சயம் இல்லாத இடத்தில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட கதைதான்.

இன்டர்நெட்டின் சேவை விரல் நுனியில் வரவிருக்கிறது.

மொபைல் போனில் கூகுள் வெப்சைட்டை அணுகும் புதிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் அமெரிக்காவின் பெரிய நகரங்களில் உள்ள வீதிகளின் (எதிர்காலத்தில் இந்திய நகரங்களுக்கும் இந்த வசதி வரலாம்) முகவரிகளைக் கண்டறிய முடியும். தெருவுக்குச் சென்ற பின் முகவரியை டைப் செய்தாலே போதும். அந்த இடம் நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது. எப்படிப் போகலாம் என்பதற்கான வரைபடத்தை அளித்து விடும்.

உலகம் நம் உள்ளங்கையில் என்பது இதுதானோ.

# பக்கவாத ஆபத்தை இரு மடங்காக்கும் தூக்கமின்மை



சிலி அப்னே (Sleep Apenea) என்பது ஒருவகையான தூக்கக் குறைபாடு. இப்பிரச்சினை உள்ளவர்களால் நிம்மதியாகத் தூங்க முடியாது. இதில் பல வகைகள் உள்ளன. அதில் ஒன்று தூங்கும் போது திடீர் திடீரென தொண்டை அடைத்துக்கொள்ளும். இப்படிப்பட்ட நோயாளிகளுக்கு பக்கவாதம் அல்லது உயிரிழப்பு ஆபத்து 2 மடங்கு அதிகமாக இருப்பதாக கனடா மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வழக்கமாக இவ்வகை நோயாளிகளுக்கு கருவிகளைப் பயன்படுத்தி சுவாசிக்க வழி செய்யப்படும். ஆனால் இந்தக் கருவிகளால் கூட பக்கவாதம் மற்றும் உயிரிழப்பு ஆபத்தைத் தடுக்க முடியாது என்று மேற்படி ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். குறுகிய காலத்திற்கு வேண்டுமானால் பலன் கிடைக்கலாம். நீண்ட காலத்திற்கு பலன் இருக்காது இதற்கு வேறு சிகிச்சை முறைகளைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஹார்ட் பெயிலியர் நோயாளிகளுக்கு நுரையீரலில் இருக்கும் தண்ணீரை வெளி யேற்ற கருவிகள் உதவும். இதன்மூலம் மூச்சு விடும் வேலையை எளிதாக்க முடியும். இது போல இருதயத் துடிப்பையும் சரி செய்யும் என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொண் டுள்ளனர். எனினும் கார்டியோவாஸ்குலர் டிசீசஸ் (Cardiobaseular Disease) எனப்படும் இரத்த நாளம் சார்ந்த நோய்களுக்கு இந்த 'சிலீப் அப்னே' முக்கியமான காரணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வினைத் திறனுடைய கற்றல் கற்பித்தலுக்கு உதவும் தர உள்ளீடுகள்

ஒரு குழந்தை தாயின் கருவறையில் இருக்கும்போதே கற்கத் தொடங்குகின்றது. தனது அகச்சூழல், புறச்சூழலீ என்பவற்றிற்கு ஏற்ப தனது அசைவுகளை மாற்றிக்கொள்கிறது. கருவறையில் இருக்கும் 280 நாட்களில் அக்குழந்தை பெற்றுக்கொண்ட புதிய புதிய அனுபவங்கள் பிள்ளையின் வளர்ச்சியல் செல்வாக்குச் செலுத்துகிறது. நல்ல அழகியலுணர்வுடைய சூழலில் வளரும் பீள்ளை ஆளுமை, நுண்ணறிவு, ஆக்கச் சிந்தனை, அழகியல் உணர்வுடையதாக மிளிர குழப்பங்கள் நிறைந்த சூழ்லில் பிறக்கும் குழந்தை சூழலுக்கு ஏற்காத வகையில் பிறழ்வான நடத்தைகளை கொண்டனவாக உருவாகின்றான.

தாயின் கருவறையில் இருந்து பூலோகத்திற்குப் பிரவேசிக்கும் குழந்தை புதிய சூழலுக்கு ஏற்ப தன்னை இயைவாக்கப் படுத்திக் கொள்கிறது. குழந்தை சூழலுடன் இடைவினை கொள்ளும்போது புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொளகிறது. எவ்வாறெனில் கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் எனும் ஐம்பொறிகளினூடாக கற்றல் அனுபவங்களைப் பெறுகின்றது. அதுமட்டுமல்லாது மேற்படி புலன்களைத் தனித்தனியாகப் பயன்படுத்திப் பெறும் கற்றல் அனுபவங்களிலும் பார்க்க ஒரு சில புலன்களின் ஒன்றிணைப்பினால் கூடிய பயனுள்ளதும், பிழையற்றதும், நிலையானதுமான அனுபவங்களைப பெறலாம் என ஆய்வுகள் மூலம் கண்டறீயப்பட்டுள்ளது. இதன் மூலம் கற்றற் சாதனங்களின் தேவை அதீகமாக உணரப் படுகிறது.

ஒரு பிள்ளை பிறந்ததிலிருந்து இறப்பு வரை கற்றுக்கொண்டேயிருக்கிறது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். கற்றல் நிகழ்ந்துள்ளது என்பதனை பிளளையின் நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றங்களின் அடிப்படையில் உணரலாம். இதனையே திருவள்ளுவர்;

**''கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக''**

எனக் கூறியுள்ளார். இவ்வாறாக நாம் கற்றதன் வழி ஒழுகுவதன் மூலமே சிறந்த நடத்தைகளை உருவாக்க முடியும்.

### கற்பித்தல் தர உள்ளீடுகள்

கற்றற் சாதனம் எனும் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரொருவருக்கும் யாதாயினும் ஒரு பொருள் கற்பதற்கு உதவுமாயின் அது கற்றற் சாதனம் ஆகும. ஆகவே இயற்கைப் பொருட்கள் பலவும் மனிதனால் ஆக்கப்பட்ட செயற்கைப் பொருட்கள் பலவும் ஒருவனுக்கு கற்பதற்கு உதவினால் அது கற்றற் சாதனமாகும். இதன் ப்ிரகாரம் அகிலத்திலுள்ள சகல பொருட்களையும் கற்றற் துணைச் சாதனங்களாகக் கொள்ள முடியும்.

இரு காதுகளாலும், இரு கண்களாலும் அறிந்துகொள்வதற்கான உபகரணங்கள் கட்புல, செவிப்புல உபகரணங்களாகும். இவை கட்புல, செவிப்புல ஆதாரங்கள், போதனை ஊடகமும் வளமும், போதனைச் சாதனங்கள் கற்பித்தலுக்கான துணைச் சாதனங்கள் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

தற்போது பெரும்பாலான நாடுகளில் கல்வி போதிக்கப்படுவதற்காக பயன்படுத்தப்படும் கற்றற் சாதனங்களின் பயன்பாடு மிக வேகமாக அதிகரித்துச் சென்றுள்ளது. நோர்வே, சுவீடன், யப்பான், அமெரிக்கா, கனடா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கற்றற் சாதனங்கள் ஊடாக பிள்ளைகள் கற்கின்றனர். ஆசிரியர் அதற்கு ஆற்றுப்படுத்துபவராகக் காணப்படுகின்றார். இத்தகைய நாடுகளில் கற்பித்தற் சாதனம் தயாரித்தல் என்பது புதியதொரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு மிக அரிதாகவே காணப்படுகிறது. வகுப்பறைக் கற்பித்தலில் நவீன சாதனங்கள் பயன்படுத்தப்படாது **(Chalk and Talk)** முறையிலே கற்பித்தல் நடைபெறுகிறது.

அரசாங்கம் கற்பித்தல் சாதனம் வழங்கும் என எதிர்பார்த்து எங்களீடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தை பாழாக்காதீர்கள். ஆசிரியர்களே விழிப்புணர்வு அடைவீர். நமது தேசத்தின் தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் உறுதி பூணுவோம். சிறப்பான முறையில் கற்பித்தலை மேற்கொள்வதற்கு வீசி எறியும் பொருட்கள் பலவற்றையும் சுற்றாடலில் உள்ள உபகரணங்களையும் பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பிப்போமாயின் அவர்களது கல்வித்தரம் மேம்படும். நிலைத்திருக்கும். எனவே ஆசிரியர்களாகிய அனைவரும் நமது உள்ளஙகளை விரிவடையச் செய்ய வேண்டும். எங்களை மாணவர்களுக்காக ஒரு நிமிடம் அர்ப்பணிப்போம்.

பயனுள்ள கற்பித்தல் முதல்தர அல்லது காட்சிப் பொருள் அனுபவங்களின் ஆரம்பமாக மிகக் கருத்துப் பொருள் அனுபவமாக விருத்தியடையும். அதனால் சிறந்த கற்றற் சாதனங்களால் துலங்கல் பெறும் மாணவர்கள் வாய்மொழி மூலமாக மட்டும் கற்பித்தலுக்குப் பழக்கப்பட்ட மாணவர்களை விடப் பயனுள்ள முறையில் விருப்போடு கற்பார்கள்.

தொன்றுதொட்டு பேணப்பட்டு வரும் குருகுலக் கல்வி முறை பெரும்பாலும் விரிவுரைப் பாங்கினை ஒத்ததாகக் காணப்படுகிறது. இது பெரும்பாலும் கருத்துப பொருள் சார்ந்தது ஆகும். அவற்றின் ஊடாக உண்மை நிலைமைகள் அல்லது சரியான உண்மை நிலைமைக்கு கிட்டிய அனுபவத்தை ஏற்படுத்துவது கடினம். ஆனால் கற்றற் சாதனம் மூலம் வாய்மொழி மூலம் உள்ள விளக்கங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கிக் கொள்ளவும், மாணவரின் அனுபவத்தை மேலும் உண்மைப்படுத்தவும் வழி ஏற்படுகின்றது.

கண்களால் பார்த்துப் பெறுகின்ற கற்றல் அனுபவமூடாக மாணவன் கற்றலில் விழிப்புணர்வடைவதோடு தூண்டுதலைப் பெறுகின்றான். காட்சி மூலம் கிடைக்கும் அனுபவம் பல கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன. இதனையே

**"நூறு பேச்சுக்களை விட ஒரு காட்சி மேலானது"** என்ற சீனப் பழமொழி உணர்த்தி நிற்கின்றது. எனவே வாய்மொழி மூலம் கிடைக்கும் அனுபவத்திலும பார்க்க காட்சி மூலம் கிடைக்கும் அனுபவம் மிகச் செறிவானதாகக் காணப்படும்.

கற்பித்தல் தர உள்ளீடுகளின் அவசியம் பற்றி கோபன் **(Copun)** கூறும் கருத்துக்கள்.

| | |
|---|---|
| உருசியினூடாக | - 1% |
| பரிச உணர்வினால் | - 1.5% |
| மணம் பார்ப்பதனூடாக | - 3.5% |
| கேட்பதனூடாக | - 11% |
| பார்வையினூடாக | - 83% |

நாங்கள் ஞாபகம் வைத்துக்கொள்வது பற்றி கோபன் கூறும் கருத்துக்கள்.

| | |
|---|---|
| வாசிப்பதனூடாக | - 10% |
| கேட்பவைகளூடாக | - 20% |
| பார்ப்பவைகளினூடாக | - 30% |
| கேட்பவை, பார்ப்பவை என்பவற்றினூடாக | - 50% |
| பேசுபவைகளினால் | - 90% |

### வகுப்பறையில் பயன்படும் தர உள்ளீடுகள்

* கட்புல சாதனங்கள்
* செவிப்புல சாதனங்கள்
* கட்புல, செவிப்புல சாதனங்கள்
* மாதிரியுருக்கள்
* தன்வகைகள்
* காட்சிப்படுத்தல்கள் அல்லது செய்துகாட்டல்கள்
* நிஜ வாழ்க்கை அனுபவங்கள்

### தர உள்ளீடுகளின் பயன்கள்

* கற்றல் வேகமடையும்.
* மாணவரை ஊக்குவித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம்.
* மாணவர்களை செயலூக்கத்துடன் இயங்கச செய்யலாம்.
* சிக்கலான எண்ணக் கருக்களை எளிதில் விளக்கலாம்.
* மாணவர்கள் புத்தூக்கத்துடன் பாடங்களைக் கற்பர்
* கற்றல் ஒரு விருப்புக்குரிய செயலாக மாறும்.
* சொற்களின் மூலம் பெறும் விளக்கத்தை விட ஆழமான விளக்கம் பெறப்படும்.
* மொழித்திறன், சொல்வளம், பேச்சுத் திறன் ஆகியவை விருத்தியடையும்.
* வகுப்பிலும் பாடத்திலும் ஒரே இசைவான தன்மை அகற்றப்படும்.
* ஆசிரியர், மாணவர் தொடர்புகள் விருத்தியடையும்.
* நேரத்தை சிக்கனமாக செலவிட வழியேற்படும்.

### தர உள்ளீடுகளை தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டியவை

* பாடங்களின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடியதாக இருத்தல்.
* மாணவரின் வளர்ச்சி நிலைக்கு அல்லது வகுப்பு மட்டத்திற்கு பொருத்தமாக அமைதல்.
* சாதனங்களைத் தயாரிக்கும் பொருட்கள் எளிதில் பெறக்கூடியதாக இருத்தல்.
* செலவின்றி அல்லது மிகக் குறைந்த செலவில் தயாரித்தல்.
* எவ்வளவு தூரம் வினைத்திறனுடையது என கவனத்தில் கொள்ளல்.
* ஏனைய சாதனங்களுடன் ஒப்பிடும் போது கூடிய வினைத்திறன் கொண்டதாக இருத்தல்.
* மாணவரின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இருத்தல்.
* கற்றலில் ஊக்குவிப்பை தூண்டக் கூடியதாக இருத்தல்.

### தர உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் தொடர்பான பிரச்சினைகள்

* கற்பித்தல் சாதனங்களின் முக்கியத் துவத்தை விளங்கிக் கொள்ளாதிருத்தல்.
* கற்பித்தல் சாதனம் இன்றி சிறப் பாக கற்பிக்க முடியும் என்ற மனப்பாங்கை கொண்டிருத்தல்.
* விலை கூடிய உபகரணங்களை வாங்க முடியாத நிலை காணப்படல்.
* சுற்றாடலில் இருந்து பெறக்கூடிய கற்பித்தல சாதனம் பற்றிச் சிந்திக்காமை.
* கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்தல் தொடர்பான தூண்டுதல் வழங்கப்படாமை.
* உபகரணங்களை பாவிப்பதற்கும் அவற்றை களஞ்சியப்படுத்தி வைப்பதற்குமான இடவசதியின்மை.
* மின்சாரம் சார்ந்த உபகரணங்களை பயன்படுத்த வசதியின்மை.
* கற்பித்தல் சாதனங்களை உரிய முறையீல் பாவிப்பதற்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் இல்லாதிருத்தல்.
* செலவு குறைந்து, கழிவுப் பொருட்களையும் பயன்படுத்தி துணைச் சாதனங்களை உருவாக்கும் திறன் இன்மை.
* வர்த்தக ரீதியாக கற்பித்தல் சாதனங்களின் உற்பத்தி முன்னேற்றம் காணாதிருத்தல்.

### தர உள்ளீடுகளைப பயனபடுத்தும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்

* வெவ்வேறு வகை உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்.
* மிகவும் பொருத்தமான உபகரணத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.
* உபகரணங்களை ஆசிரியர் மாணவர் இணைந்து தயாரிக்க வேண்டும்.
* உபகரணங்களின் நோக்கத்தை மாணவர் அறிந்திருக்க வேண்டும்.

கற்பித்தல் சாதனங்களின் முக்கியத்துவம் அறிந்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் மாணவர்மையக் கல்வி மூலம் அதாவது சாதனங்களினூடாக மாணவர்கள் சுயமாக கற்பதற்கான தூண்டுதலை வழங்கக்கூடியவராக நவீன ஆசிரியர் விளங்குகின்றார். அத்தகைய ஆசிரியருக்குரிய பண்புகள்.

### நவீன ஆசிரியர்

ஆசிரியர் தொழில் ரீதியான அர்ப்பணிப்பு, ஈடுபாடு, பெருமை, கெளரவம், விழிப்புணர்வு என்பவற்றைத் தானே தியாகம் செய்பவராகவும், அரசியல் நோக்கில் மட்டுமன்றி நல்ல மனிதராக, நல்ல அயலவராக, நல்ல தந்தையாக அல்லது தாயாக, நல்ல கணவராக அல்லது மனைவி யாக விளங்குவதற்கு ஏற்றவாறு அவர் களை நாட்டின் நற்பிரஜைகளாக வளாத்தெடுப்பதும், பயிற்றுவிப்பதும், கற்பிப்பதும் ஆசிரியரது மனப்பாங்காகவும் பணியாகவும் அமைகின்றது.

இலங்கையிலே ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்களது வாண்மைத்துவத்தை உயர்த்துவதோடு சிறந்த ஆளுமை படைத்த நவீன ஆசிரியர்களை உருவாக்கும் முயற்சியில் பல நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து உருவாக்கப்படும் ஆசிரியர்கள் மிகவும் தரம் வாய்ந்தவர்கள் என அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு அவர்களை பாடசாலை சமூகத்தினர் நியமிப்பதற்காக போட்டி போட்டு செயற பட்டு வருகின்றனர். அவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

த.சிவகுமார்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

இவ்வாறாக நவீன ஆசிரியர்களை உருவாக்கும் முயற்சியில் 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன. அவற்றுள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி முதன்மையானதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் கல்லூரியின் தோற்றமும் இமாலய வளர்ச்சியுமே ஆகும். அந்த வகையில் வளர்ச்சிப்படியின் படிக்கல்லாக வேறு எந்த தேசிய கல்வியியற் கல்லூாயிலும் இலலாத ஒரு துறையாக கற்றல்- கற்பித்தல தர உள்ளீட்டு உபகரண மூலவள நிலையம் விளங்குகின்றது. இத்துறையின் வளர்ச்சிக்கு ஒளி கொடுத்தவர்களாக எமது கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களும் உப பீடாதிபதி பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்களும் மேற கொண்ட விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, சமூக சிந்தனை ஆகிய உயர் இலட்சியத்தில் இருந்து விளைந்த ஒரு துறையாக வளர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது எனலாம். □

## ஊகங்களுக்கு மத்தியில் ஜனாதிபதியின் அமைச்சரவைக் கூட்டம் திடீர் இரத்து

(கொழும்பு)

ஜனாதிபதி பொறுப்புடன் சந்திரிகா குமாரதுங்க நடத்த இருந்த இறுதி அமைச்சரவைக் கூட்டம் திடீரென இரத்து செய்யப்பட்டுள்ளது.

சந்திரிகா குமாரதுங்கவுக்கு பிரியாவிடை அளித்து வழியனுப்பக் காத்திருந்த அமைச்சர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாகிவிட்டது.

இருப்பினும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்குப் பின் இவ் அமைச்சரவைக் கூட்டத்தை சநதிரிகா கூட்டக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த இருவாரங்களாக மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து சந்திரிகாவும் அவரது சகோதரர் அனுராவும் எந்தப் பொதுக்கூட்டங்களில் உரையாற்றாத நிலையில் நாட்டு மக்களுக்கு சந்திரிகா ஆற்ற உள்ள இறுதி ஜனாதிபதி உரை குறித்து யூகஙகள் தெரிவிக்கப்பட்டன.

தனது இறுதி உரையில் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜே.வி.பி மீது கடுமையான விமர்சனங்களை சந்திரிகா முன்வைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அமைச்சரவைக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

எந்த நாட்டில் ஆள்வோருக்கு அதிகமாக ஆள வேண்டுமென்ற இச்சை வெறி ஏற்படுகிறதோ அங்கு ஒரே குழப்பம் தான் உண்டாகும்.

-பிளேட்டோ

வலம்புரி

## தீர்க்காமல் போறாயோ அம்மா பூம்பாவாய்!

நான் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு உடனடியாகதீர்வு காண்பேன் அதற்காக விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவேன்.

இந்த நாட்டில் யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகள் ஏராளம். ஆயுத கலாசாரத்தின் அழிவை நான் அனுபவித்தவள் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான விதவைப் பெண்களை யுத்தம் உருவாக்கியுள்ளது.

இதற்கு முடிபு கட்ட சமாதானத்தை ஏற்படுத்துவது அவசியம். இதற்காக என்ன விலை கொடுக்கவும் நான் தயாராக இருக்கின்றேன் இவ்வாறு தனது அரசில் நுழைவின் போது தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரை இன்னமும் நம் செவிகவில் ஒலிக்கின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. இங்கு பயங்கரவாத பிரச்சினை இருக்கின்றது என ஜனாதிபதி யாக இருந்த டி.பி.விஜேயதுங்க கூறிய போது இலங்கை நாட்டில் இருப்பது இனப்பிரச்சினையே என்கூறியவர் சந்திரிகா குமாரதுங்க.

இவ்விதம் அவர் கூறியதன் மூலம் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியவர் சந்திரிகா குமாரதுங்காவே என மக்கள் கருதினர்.

யுத்தத்தின் உச்சமான காலத்தின் நடந்த தேர்தலின்போது சமாதானம் என்ற ஒரேவார்த்தைக்காக சந்திரிகா குமாரதுங்கவிற்கு மக்கள் வாக்களித்தனர்.

ஜனாதிபதியாக வெற்றி பெற்றதும் சமாதான பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தபோதி லும் சமாதானத்தின் மீதான விசுவாசம் மிகக்குறைவாகவே இருந்தது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தையின் சகுனித்தனத்திற்குள் சிக்கி சமாதானப்பேச்சு என்பதற்கு முன்னதாக ஒரு முறை யுத்தம் நடத்தினால் என்ன? என்ற எண்ணம் அவரிடம் ஏற்பட்டது.

என்ன விலை கொடுத்தும் சமாதானத்தை ஏற்படுத்துவேன் எனக்கூறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது உறுதி மொழியில் இருந்து விலகிக்கொண்டார்.

சமாதானத்தை ஏற்படுத்துவார் என நம்பி வாக்களித்த மக்களுக்கு அவர் துரோகத்தனம் இழைத்தார்.

யாழ்ப்பாணத்தின் மீது மிகப்பெரும் யுத்தத்தை நடத்தி வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தினார்.

அவரது ஆட்சியில் அப்பாவித்தமிழ் இளைஞர்கள் பலர் காணாமல் போயினர். அவர் நடத்திய யுத்தம் விதவைகளையும் ,அநாதைகளையும் இந்த மண்ணிற்கு தானம் செய்தன.

சமாதானம் என்ற வாசகத்தின் உச்சரிப்புடன் ஆட்சிபீடம் ஏறிய அம்மையார் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இரண்டு தடவைகள் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை பயன்படுத்தத் தவறி விட்டார். இப்போது அவர் சமாதானத்தை காணவிரும்பாத பூம்பாவையாய் போகிறார்.

# வாக்காளர் அட்டைகள் மாங்குளத்தில் எரிப்பு

(கிளிநொச்சி)

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதை வெளிப்படுத்தும் வகையில் மாங்குளம் பிரதேசத்தில் மக்களினால் வாக்காளர் அட்டைகள் எரிக்கப்பட்டன.

மாங்குளம் பிரதேச மக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நேற்றுக்காலை 10 மணி அளவில் இந்த எரிப்புப் போராட்டங்களை நடத்தின. சிங்கள இனவாத ஜனாதிபதித் தேர்தலுக்கும் எமக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை எமக்குரிய நாட்டை எமது தேசியத்தலைவரின் பாதையில் மீட்டெடுக்கவேண்டும்.எமது நிலத்தில் எந்தவொரு சிங்கள ஆட்சியாளருக்கும் இடமில்லை என மாங்குளம் மக்கள் தெரிவித்தனர்.

தேர்தல் நேரங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் நோக்கில் அவர்கள் கூறும் வாக்குறுதிகளை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்நடவடிக்கை அவர்களுக்கொரு பதிலடி எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.இதேபோல் கரிப்பட்டமுறிப்பு, தச்சடம்பன், பெரியபுளியங்குளம் போன்ற இடங்களிலும் ஆயிரக்கணக்கான வாக்காளர் அட்டைகள் எரித்து மக்கள் எதிர்ப்பினைக் காட்டியுள்ளனர். (ச-4)

## தேர்தலை தொடர்ந்துவரும் நாட்களிலும் அமைதிபேண மதத்தலைவர்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான இரண்டு பிரதான வேட்பாளர்களும் ஜனநாயகத்தின்பால் கொண்டுள்ள பெருமதிப்பின் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னைய நாட்களில் வன்செயல் பெரிதும் குறைந்துள்ளதாக மாத குருமார் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை சுபாரதி நிகழ்வில் கலந்துகொண்ட சங்கைக்குரிய தொடம்பகுலராகுல தேரர் கருத்துத்தெரிவிக்கையில் பிரச்சினையை உருவாக்காத முறையில் ஊடக நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் எனவும் தெரிவித்தார்.

மேலும் சகல சமயங்களின் கூட்டமைப்பின் இணைத் தலைவர் மதிப்பிற்குரிய சரத்கெட்டியாராச்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அமையானமுறையில் நடைபெறவதற்கு சகல மதத்தவர்களும் பூரண ஆதரவு வழங்கியதாகத் தெரிவித்தார்.

மௌலவி அல்ஹாஜ் றியாத் முகமத் தேர்தலைத் தொடர்ந்துவரும் நாட்களில் அமைதியும் சமாதானமும் கடைப்பிடிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். (அ-19)

## தமிழீழ தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நேரம் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியதொலைக்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் தனது ஒளிபரப்பு நேரத்தை ஒன்றரை மணிநேரமாக அதிகரிக்கவுள்ளது.

தமிழீழ தேசியத்தொலைக்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆசிய ஒளிபரப்பு இரவு 7.30 முதல் 9மணிவரைக்கும் ஐரோப்பிய ஒளிபரப்பு பிரான்ஸ் நேரம் இரவு 8.30 முதல் 10 மணிவரைக்கும் நடைபெறவுள்ளது.

மாவீரர் நாள் அன்று ஒளிபரப்பு பிற்பகல் 5.00 மணி முதல் இரவு 7.30 மணிவரை நேரடி ஒளிபரப்பாக ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரேநேரத்தில் நடைபெறவுள்ளாதாகவும் தேசியத் தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## திருமலை நகர்ப்பகுதியில் இருந்து இராணுவம் தற்காலிக விலக்கம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து நேற்று இராணுவம் தற்காலிகமாக விலகிக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. திருமலையில் புத்தர் சிலை நிறுவியதைத் தொடர்ந்து பாடசாலைகளுக்கு அருகாமையிலும் சந்திகளிலும் ஏராளமான இராணுவத்தினரும் கடற்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த மேலதிக இராணுவக்குவிப்பை விலக்கக்கோரி தமிழ் மக்கள் பாரியபோராட்டங்களை நடத்தி வந்தனர். இந்நிலையில் நேற்று தேர்தல் நடைபெற்றதால் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து 500 மீற்றுக்குள் எதுவித பாதுகாப்புத் தரப்பும் இருக்ககூடாது என்ற தேர்தல் விதிகளுக்கு அமைய தற்காலிகமாக அவர்கள் விலக்கிக்கொள்ளப்பட்டனர்.

இருந்தபோதும் சோதனைச்சாவடிகள் மற்றும் சந்திகளில் மணல் மூட்டைகளை அடுக்கி தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சர்ச்சைக்குரிய புத்தர்சிலையைச் சுற்றிய தமது நிலைகளை இராணுவத்தினர் விலக்கிக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## தொலைத்தொடர்பு நிலைய பணியாளர் தாக்கப்பட்டார்

(கொழும்புத்துறை)

நல்லூர் செட்டித்தெரு வீதியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையப் பணியாளரை பிரபல பாடசாலை மாணவன் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.நல்லூரைச் சேர்ந்த சத்தியகுமரன் (வயது 50) என்பவரே தலையில் காயமுற்றவராவார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00 மணிக்கு இந்தத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொலைபேசி எடுப்பதற்காக வந்ததாகக்கூறியபடி வந்த இரு இளைஞர்களில் ஒருவன் அவரைத் தாக்கியதாகவும் தாக்கியவன் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட மற்றவர் தப்பிஓடிவிட்டதாகவும் பிடிபட்டவர் மாணவர் பேரவையிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-51)

## ஏற்புத் தடுப்பூசி ஏற்றல்

(சுதுமலை)

பாடசாலை மாணவர்கள், சிறிய சிறிய ஏற்பு காயங்களுக் கெல்லாம் ஏற்புத்தடை ஊசி பெறுவது தேவையற்ற ஒன்றாகும். இவ்வாறு தெரிவித்தார் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர் சியாணி அவர்கள்.

கடந்த மாதம் சுகாதார பணிமனையில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற தடுப்பூசிகளில் முக்கியத்துவம் தொடர்பான கலந்துரையாடலில் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது,

குழந்தை பிறந்து முதல் மூன்றாம் ஐந்தாம் ஏழாம், மாதங்களில் ஏற்பு நோய்க்கு எதிராக தடைமருந்து வழங்கப்பட்டு பின்பு ஒன்றரை (1 1/2) வயதிலும் ஐந்து வயது முடிவிலும் வழங்கப்பட்டு வருகின்றது. இதனைத் தவிர 10-15 வயது பிரிவுகளில் பாடசாலைகளில் வைத்து ஏற்புத்தடை ஊசியும் வழங்கப்படுவதால் ஏற்புத் தடைக்குரிய எதிர்ப்பு சக்தி உடலிற்கு வழங்கப்படுகிறது.

இதன் மூலம் ஏற்பு ஏற்படுத்துவது தவிர்க்கப்படுகின்றது எனவே இவற்றை சரிவரப் பெற்றுக்கொண்டும் பிள்ளைகள் சிறிய காயங்களுக்கெல்லாம் வைத்தியசாலைக்குச் சென்று ஏற்புநோய்கு தடுப்பு மருந்து ஏற்றுவது அநாவசியமானது எனவும் இவ் விடயத்தில் பெற்றோர்கள்,ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுக்கவேண்டும் எனவும் இது தொடர்பான மேலதிக தகவல்களை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (து-252)

## கிருபாகர், ஜெயக்குமார் ஞாபகார்த்த வினாடி வினாப் போட்டி

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் கிருபாகர் ஜெயக்குமார் ஞாபகார்த்த வினாடி வினாப்போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களுக்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10.00மணிக்கு விவசாய பீடத்தில் நடைபெறவுள்ளதாக விவசாயபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.(அ)


## நிழற்குடை அமைப்பு

(நல்லூர்)

யாழ்-பருத்தித்துறை வீதியில், செங்குந்தா சந்தையையொட்டி அமைக்கப்பட்டிருந்த பஸ் பயணிகள் தரிப்பிடம், செங்குந்தா நவீன சந்தையின் கட்டடவேலை ஆரம்பித்த காலத்தில் இடிக்கப்பட்டதால் பஸ் பயணிகள் மழையிலும் வெயிலிலும் தரித்து நிற்க இடமின்றி பல அசௌகரியங்களை அனுபவித்து வந்தனர்.

நவீன சந்தை வேலைகள் பூர்த்தியாகி கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்ட பின்னரும் அவ்விடத்தில் பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைக்க எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததை நல்லூர் வன்னியசிங்கம் பொது பணி மன்றம், புதிதாக மீள் நியமனம் பெற்ற மாநகர ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து மாநகர சபையின் அனுசரணையுடன் தனிப்பட்ட சிலரினால் அவ்விடத்தில் புதிதாக நிழற்குடை ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. (அ)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



எல்லையற்ற ஆற்றல், உண்மை, நிறைவு, இவை நமதே. இவற்றை நாம் பெறவேண்டியதில்லை. ஏனெனில் அவை நம்முடையவையே. அவற்றை வெளிப்படுத்தவேண்டும். அவ்வளவுதான். நமது எல்லையற்ற அறிவையும், ஆற்றலையும் உணர்ந்து எழுந்துநிற்கும் நாள் வந்தே தீரும். அந்த மாபெரும் நிகழ்ச் சியை விரைவுபடுத்த நாம் அனைவரும் உதவீ செய்வோம்.

சுவாமி விவேகானந்தர்

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

| வாக்கெடுப்புப் பிரிவின் பெயர் | வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை | பதியப்பட்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கை | வாக்களித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 47 | 52,986 | 276 |
| வட்டுக்கோட்டை | 57 | 62,781 | 278 |
| காங்கேசன்துறை | 58 | 67,133 | 90 |
| மானிப்பாய் | 62 | 68,783 | 347 |
| கோப்பாய் | 60 | 63,752 | 390 |
| உடுப்பிட்டி | 53 | 55,499 | 88 |
| பருத்தித்துறை | 43 | 47,188 | 39 |
| சாவகச்சேரி | 51 | 62,022 | 53 |
| நல்லூர் | 53 | 70,251 | 313 |
| யாழ்ப்பாணம் | 45 | 62,089 | 442 |
| கிளிநொச்சி | 95 | 89,454 | 01 |
| மொத்தம் | 624 | 701,938 | 2317 |

## தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

| மாவட்டம் | மகிந்த | ரணில் | விக்டர் ஹெட்டிகொட |
|---|---|---|---|
| இரத்தினபுரி | 6697 | 3800 | 35 |
| யாழ்ப்பாணம் | 327 | 1405 | 109 |
| அம்பாந்தோட்டை | 6918 | 2640 | 25 |
| வன்னி | 1356 | 2234 | 21 |
| மாத்தறை | 10021 | 4128 | 27 |
| கொழும்பு | 10901 | 6143 | 62 |
| மாத்தளை | 6547 | 3910 | 19 |
| மொனராகலை | 5790 | 3270 | 16 |



முகமாலையில் கூடிய மக்கள் அங்கு வாக்காளர் அட்டைகளை தீயிட்டு எரிப்பதை படத்தில் காணலாம்.

# நாடு முழுவதும் 75 % வாக்களிப்பு

இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நேற்று நடைபெற்ற தேர்தலில் தென்பகுதியில் வன்முறைகள் குறைந்தளவிலேயே இடம் பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுகாலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையும் நடைபெற்ற வாக்களிப்பில் நாடு முழுவதும் 75 வீதமானோர் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வெண்ணிக்கை இறுதியான எண்ணிக்கை என கூறமுடியாதுள்ளதென கூறிய அவர், மொத்த வாக்குகளும் எண்ணப்பட்ட பின்னரே இறுதி முடிபு அறிவிக்கப்படும் என்றார்.

நேற்று இரவு 10 மணியளவிலிருந்து தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 710 வாக்கு எண்ணும் நிலையங்களில் எண்ணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இன்று மாலை இறுதி முடிவு தெரிய வரும் என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-4,8)

## சிங்கள வர்த்தகர்...

தலையின் பின்புறத்தில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதால் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உப்புவெளிப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (ச- 4,8)

## வாக்களிக்காது...

தடைவிதிப்பதால் அவர்களுக்கு ஏன் நாம் வாக்களிக்கவேண்டும் என்றும் இந்த மறியல்போராட்டத்தில் அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர். போராட்டத்தின் முடிவில் இலங்கைப் போர்நிறுத்தக்கண் காணிப்புக் குழுவினரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (ச)

## யாழ். தேர்தல் முடிவுகள்

நல்லூர்; ரணில் 198, மகிந்த 100

கோப்பாய்; ரணில் 271, மகிந்த 51

சாவகச்சேரி; ரணில் 33, மகிந்த 10

உடுப்பிட்டி; ரணில் 64, மகிந்த 15

மானிப்பாய்; ரணில் 256, மகிந்த 67

வட்டுக்கோட்டை; ரணில் 191, மகிந்த 53

பருத்தித்துறை; ரணில் 25, மகிந்த 05

யாழ்ப்பாணம்; ரணில் 301, மகிந்த 134

கிளிநொச்சி; ரணில் 01 ,மகிந்த 00

காங்கேசன்துறை; ரணில் 32, மகிந்த 24

ஊர்காவற்றுறை; ரணில் 105, மகிந்த 120 (ச)

## நேற்று வெறிச்...

டின் சில பகுதிகளில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும், வாகனங்கள் மீதான தாக்குதல் அச்சம் காணப்பட்டதாகவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்தது.

இதேவேளை வடமராட்சி தென்மராட்சி மற்றும் தீவகத்திலும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டதால் மக்கள் நடமாட்டம் இன்றிக் காணப் பட்டது. ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழர்களின் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு தமிழ்மக்கள் வெளிகாட்டியுள்ளதாக பல்வேறு தரப்பினரும் தெரிவித்துள்ளனர். (ச-19)

# ஜனாதிபதித் தேர்தலினை...

ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாடு பூராகவும் நேற்று நடைபெற்றது.

சிங்களத் தலைமைகளால் தமக்கு எவ்வித விமோசனமும் கிடைக்கப்போவதில்லையெனத் தெரிவித்து இத்தேர்தலை புறக்கணிப்பதற்கு வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் தீர்மானித்தனர்.

யாழ்ப்பாணத்தில் கல்விச்சமூகம் மற்றும் பொது அமைப்புக்கள் என்பன தேர்தலை பகிஷ்கரிப்பது குறித்து தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

அதனை ஏற்றுக் கொண்ட யாழ்ப்பாண மக்கள் நேற்றைய தேர்தலை புறக்கணித்து வாக்களிக்கச் செல்லவில்லை. இதனால் இலங்கை தேர்தல் வரலாற்றில் யாழ்ப்பாணத்தில் இம்முறையே மிக மிக குறைந்த வீதமான வாக்களிப்பு இடம்பெற்றதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழிலில் வன்முறைகள் இன்றித் தேர்தல் நடைபெற்ற போதும் மக்கள் நேற்றைய நாளை துக்க தினமாகவும் கரிநாளாகவும் கடைப்பிடித்ததால் வாக்களிக்கச் செல்லவில்லை.

கிளிநொச்சியில் இருந்து எவரும் வாக்களிப்பதற்கு முகமாலை கொத்தணி வாக்குச் சாவடிக்கு வரவில்லை. போக்கு வரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வாகனங்கள் அனைத்தும் தரித்த நின்ற இடத்தை விட்டு நகரவில்லை.

வாக்குச்சாவடிகளில் கடமையில் இருந்த உத்தியோகத்தர்கள் வேலை எதுவும் இன்றிக் காணப்பட்டனர். மட்டக்களப்பில் தமிழர் பிரதேசங்களில் 5வீதமான வாக்குப்பதிவும் முஸ்லிம் பகுதிகளில் 40 வீதமான வாக்குப் பதிவும் நடந்துள்ளது.

மண்முனைத்துறை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் பத்து வாக்குகளும் கறுத்தப்பாலம் கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில் 336 வாக்குகள் மட்டும் பதிவாகியுள்ளன.

அம்பாறையில் திருக்கோயில் பிரதேசத்தில் ஐந்து வீதம் ,ஆலடி வேம்பில் ஐந்து வீதம் ,கல்முனையில் 20 வீதம் ,பாண்டிருப்பில் 20 வீதம் ,காரைதீவில் 20 வீத வாக்குகளும்பதிவாகியுள்ளன. அம்பாறையில் சிங்களவர், முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் அங்கு வாக்குவீதம் 50 வீதமாக உள்ளது.

மட்டக்களப்பின் தமிழீழ நிர்வாகப் பகுதியில் 80 ஆயிரம் வாக்காளர்கள் உள்ள போதும் எவருமே கொத்தணி வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்கவில்லை. இதனால் 89 கொத்தணி வாக்குச் சாவடிகளும் வெறிச்சோடிக்கிடந்தன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களுக்காக அமைக்கப் பட்ட 265 வாக்களிப்பு நிலையங்களில் 5 வீதமான மக்களே வாக்களித்துள்ளனர்.

மன்னாரில் மொத்தம்6 ஆயிரம் பேர் வரையில் வாக்களித் துள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன. இது மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 8 வீதமாகும். மன்னாரில் மடு, உயிலங்குளம் உள்ளிட்ட 3 பகுதிகளில் கொத்த ணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்த போதும் ஒருவர் கூட வாக்களிக்கச் செல்ல வில்லை.

வவுனியாவில் 35 வீதமானோரே வாக்களித்தனர் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி சண்முகம் தெரிவித்துள்ளார். தமிழீழ நிர்வாக பிரதேச மக்களுக்காக அமைக்கப் பட்டிருந்த ஓமந்தை கொத்தணி வாக்களிப்பு நிலையம் கேட்பாரற்று தேர்தல் அதிகாரிகளை மட்டுமே கொண்டிருந்தது.

ஓமந்தைச் சோதனைச்சாவடி வழமைபோல் திறக்கப்பட்டிருந்தது. தமிழீழ நிர்வாகப்பிரதேசங்களில் இருந்துவரும் வாக்காளர்களை அழைத்து செல்ல பேருந்துகள் காத்திருந்தன. ஆனால் மக்கள் எவரும் வாக்களிக்கச் செல்ல வில்லை.

மாறாக வழமையான பயணிகள் போக்கு வரத்து நடைபெற்றது. கண்காணிப்பாளர்களும் நிலைமையை அவதானித்து வந்தனர். திருமலையில் மொத்தம் 30 -40 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதமானது 5முதல் 10 வீதமாக இருக்கலாமென தெரிய வந்துள்ளது. இங்கு சிங்களவர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையினராக வசிப்பதால் 40 வீதமான வாக்களிப்பு பதிவாகியிருக்கிறது. (ச-4-8)


கலாலயா
பயிற்சியகம்
இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன
மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்
- கேக் ஐஸிங்
- பூ வேலை
- உணவு தயாரித்தல்
- கை வேலை
- கூந்தல் அலங்காரம்
- FABRIC வர்ணமிடல்
- FACIAL, மணப்பெண் அலங்காரம்
இத்துடன் 6 மாதகால தையல் பயிற்சிக்கும் அனுமதிகள் உண்டு
மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப 2.30 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.
-பதிவாளர்



மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

இளைய தளபதி விஜய் வெடிக்கும் சிவகாசி
விஜய் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் மாலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா ஸ் சினிமா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு யாழ்ப்பாணம்
தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த
அது ஒரு கனாக்காலம்
பாலுமகேந்திராவின் கதை, வசனத்தில் இளையராஜாவின் இசையில்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
14.11.2005-20.11.2005 வரை
இரவுக் காட்சிகள் காண்பிக்கப்பட மாட்டாது
17.11.2005,18.11.2005
படக்காட்சி காண்பிக்கப்பட மாட்டாது

நிறைஞ்சனாஸ் சங்கானை
பார்த்திபன் ,லக்சுமிராய் , வடிவேலு நடித்த
குண்டக்க மண்டக்க
கா.நே: 11.00, 02.45, 6.00,(பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.